**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**எம்.சி.ஓ.பி எண்.596/2021**

**ம.சா. – 1 – செல்வலட்சுமி**

**நாள். 07.11.2025**

**ம.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.1 முதல் 10 ஆவணங்கள் குறித்த முழு விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு விபத்திற்கான குற்றவியல் வழக்கில் போலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு விபத்தை நேரில் பார்த்தவர்கள் கண்ணன் மற்றும் ரத்தினம் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் சம்பவ விபத்தில் லாரியின் வலது பக்க டயரை தட்டி பார்க்க சென்ற போது தான் வழக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் கணவர் தான் லாரினை நிறுத்தி விட்டு லாரியின் வலது பக்க மாக ரோடை கடக்க முயற்சித்து தான் வழக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் கணவர் ஓட்டி சென்ற லாரியானது கனரக லாரி என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்பவத்தின் லாரியின் தகுதி சான்று 22.10.2019 வரை உள்ளது என்றால் சரிதான். பொதுவாக தகுத்தி சான்று இல்லாமல் வாகனத்தை ஓட்டக்கூடாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவரின் ஓட்டுனர் உரிமத்தின் படி 22.11.2020 அன்றே டிரான்ஸ்போர்ட் வாகனத்தை ஓட்டும் உரிமம் முடிந்தது என்றால் சரிதான். எனது கணவரின் ஓட்டுனர் உரிமம் விபத்து சமயத்தில் காலாவதி ஆகிவிட்டது என்றாலும், என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் தகுதி சான்று காலாவதியாகவிட்டதாலும், சம்பவத்தின் போது என் கணவர் சொந்தமாக கனரக வாகனம் வைத்து சம்பாதித்து வந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் வாடகைக்கு லாரி வைத்து ஓட்டி வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று எனது கணவர் உறவினரை அழைத்து கொண்டு சென்றதா எனது புகாரில் சொல்லபப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ஆம் மனுதாரரான எனது மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 2 ஆம் மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து சம்பாதித்து வருகிறார் என்றால் சரிதான். 3 ஆம் மனுதாரர் என் மகள் திருமணமாகி அவரது கணவருடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். 2 மற்றும் 3 ஆம் மனுதாரர்கள் இறந்து போன என் கணவரின் சம்பாத்தியத்தில் வாழவில்லை என்பதால் அவர்களுக்கு அன்பு மற்றும் பாசத்திற்கான இழப்பீடு மட்டுமே வழங்க முடியும் என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தபட்ட ஆட்டோ ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாத நிலையில் மேற்படி ஆட்டோவிற்கான காப்பீடு நிறுவனத்தின் படி 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

எனவே 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.11.10 12:07:21 +0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.